அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 12/2003(V)

எனது இலக்கம் : EST-7/04/CAB/4000(iv)
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.08.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு மற்றும் தட்டச்சிடல் சம்பந்தமான கட்டண மீளமைப்பு</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2016.08.22 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2003(III) மற்றும் 2017.02.27 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2003(IV) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் தொடர்பில் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அச்சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் பின்வருமாறு மீளமைப்பதற்கு 2026.06.30 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**03. மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்**

**(அ) <u>மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்</u>**

I. ஆவணத்தின் வகையைக் கருத்திற்கொள்ளாது, மொழிபெயர்க்கப்படும் சொற்களின் எண்ணிக்கையின் பிரகாரம் ஒரு சொல்லுக்கு ரூ. 5.00 வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

II. மொழிபெயர்ப்பிற்காகப் பயன்படுத்தப்படும் ஆவணத்தில் குறிப்பிடப்படும் சொற்களின் எண்ணிக்கை அல்லது மொழிபெயர்க்கப்பட்ட பிரதியில் குறிப்பிடப்படும் சொற்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உரிய கட்டணங்களைச் செலுத்த முடியும்.

III. 1996.07.19 ஆந் திகதி அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 20/96 இன் பால் தங்களது அவதானத்தினை ஈர்ப்பதோடு, அதன் பிரகாரம் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாத தாபனங்களுக்காக, மொழிபெயர்ப்பு தொடர்பான தொழில்முறைத் தகைமைகளைக் கொண்ட நபர்களைத் தெரிவுசெய்து, வளவாளர் ஆவணமொன்றினைப் பேணி வருவதுடன், சேவைத் தேவையின் அடிப்படையில் அம்மொழிபெயர்ப்புக்களை மேற்கொள்ள முடியும்.

(ஆ) <u>உரைபெயர்ப்பு கட்டணங்கள்</u>

| உரைபெயர்ப்பின் இயல்பு | மணித்தியாலத்திற்கு (ரூ.) |
|---|---|
| (அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைக் கூட்டங்களின் நிறுவனங்களது பேச்சுக்களைஒருங்கிணைவாக/உடனடியாகஉரைபெயர்த்தல். | 1400/- |
| (ஆ) விஞ்ஞான அல்லது தொழிநுட்ப வடிவிலான கலை விரிவுரைகளை ஒருங்கிணைவாக/உடனடியாகஉரைபெயர்த்தல் | 1500/- |
| (இ) பொதுக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் மேற்படி "(ஆ)" இல் குறிப்பிடப்படாத ஏனைய விரிவுரைகளை ஒருங்கிணைவாக/ உடனடியாக உரைபெயர்த்தல். | 1000/- |

04. <u>தட்டச்சுக் கட்டணங்கள்</u>

(அ) தட்டச்சிடப்படும் ஒரு பக்கம் தொடர்பாக,

| | | |
|---|---|---|
| I. | 360 சொற்கள் அல்லது அதற்கு அதிகமான | ரூபா 90/- |
| II. | 240 சொற்களிலிருந்து 359 சொற்கள் வரை | ரூபா 80/- |
| III. | 240 சொற்களுக்குக் குறைந்த | ரூபா 60/- |

(ஆ) ஸ்ரென்சில்கள் தட்டச்சிடுவதற்காக ஒரு பக்கத்திற்கு ரூபா 100/-

மேற்படி தட்டச்சிடப்படும் கட்டணங்களை, கணனியில் அச்சிடுவதற்காகவும் செலுத்தலாம் என்பதுடன், உரிய கட்டணங்கள், துண்ட அடிப்படையில் வேலைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் போது மாத்திரமே செலுத்தப்படல் வேண்டும்.

05. மேற்படி மீளமைக்கப்பட்ட கட்டணங்கள் 2026.08.01 ஆந் திகதியில் இருந்து வலுவிலிருக்கும்.

ஒப்பம்/எஸ்.ஆலோகபண்டார

செயலாளர்

பொது நிர்வாக, மாகாண சபைகள்

மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி : 011-2697233
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ad-7-est@pubad.gov.lk